**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு. S. தனராசு, பி.இ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

ந.க.எண். **3058/2017**/உ.திகு-3 நாள்: **29.05.2018**

**தி.அ. எண். 137 /2018**

உள்ளாட்சியின் பெயர் : **கோயம்புததூர் மாநகராட்சி (வடக்கு மண்டலம்)**

பொருள் : மனைப்பிரிவு - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும பகுதி – கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வெள்ளக்கிணர் கிராமம் - **க.ச.எண். 268/3D** – மனைப்பரப்பு **1.15¼** ஏக்கரில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திருமதி. C. விஜயலட்சுமி, கோயம்புத்தூர் அவர்களின் விண்ணப்பம் நாள். 08.06.2017
2. உதவி ஆணையாளர், வடக்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி கடிதம் ந.க. எண். 5542/2017 எச்-1(வ), நாள்: 07.07.2017 மற்றும் 21.03.2018
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும கூட்டத் தீர்மானம் எண் 35, நாள் 28.07.2017
4. மனுதாரர் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தப்பட்ட கடிதம் பெறப்பட்ட நாள். 18.05.2018

.-------0--------

**உத்திரவு:**

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும பகுதி, கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வெள்ளக்கிணர் கிராமம், க.ச.எண். 268/3D மனைப்பரப்பு 1.15¼ ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு **ம.வ/கோ.உ.தி.கு. எண். 108/2018** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும் **திட்ட அனுமதி எண். 137/2018** என்ற எண்ணில் கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## சிறப்பு நிபந்தனை-1

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

## பொது நிபந்தனைகள்

1. இந்த திட்ட அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91-A நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35 – 1972)ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)ன் கீழ்மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு

   (1) திட்டஅனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப் பட்டிருந்தாலோ,

   (2) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ,உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.
4. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.
5. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (கோயம்புத்தூர் மாநகராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
7. திட்டஅனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்படவேண்டும்.

29/5/18

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்.
கோயம்புத்தூர்-12

29/5/18

29/5/18

இணைப்பு
முத்திரையிடப்பட்ட வரைபடம் - 2
நிபந்தனைப்படிவம் - 2

பெறுநர்

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
டவுன்ஹால்,
கோயம்புத்தூர்.

**நகல்:** மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)

திருமதி. C. விஜயலட்சுமி,
கதவு எண். 123, பாசகிணர் தோட்டம்,
உருமாண்டாம்பாளையம், வெள்ளக்கிணர்,
கோயம்புத்தூர்- 29

135

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: டாக்டர்.க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,

ந.க.எண்.5109/2018/ எச்1/எம்.எச்3(வ) நாள். 6.12.2018
அனுமதி எண்.46 /2018/ எம்.எச்3(வ)

பொருள்:- மனைப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வெள்ளக்கிணர் கிராமம் - க.ச.எண்.268/3D – **1.15 1/4** ஏக்கர் பரப்பில் – உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – திட்ட அனுமதி வழங்கியது – மனைப்பிரிவு அனுமதி வழங்குதல் – தொடர்பாக

பார்வை:- 1) உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் கோயம்புத்தூர் அவர்களின் திட்ட அனுமதி ந.க.எண்.3058/2017/உதிகு–3, திட்ட அனுமதி எண்.137/2018, நாள்.29.05.2018.
2) ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 6.12.2018.

------

உத்திரவு:-

கோயம்புத்தூர்மாநகராட்சி, வடக்குமண்டலம், வெள்ளக்கிணர் கிராமம் க.ச.எண்.268/3D ல் **1.15 1/4** ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/கோஉதிகுஎண்.137/2018 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதினை தொடர்ந்து பார்வை 1–ல் கண்ட உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் அவர்களின் திட்ட அனுமதியின்படியும், பார்வை 2–ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படியும் மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்படுகிறது.

இணைப்பு:-
மனைப்பிரிவு வரைபடம்

6/12/18

ஆணையாளருக்காக,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

6/12/18

பெறுநர்:-
திருமதி.C. விஜயலட்சுமி,
123, பாசகிணர் தோட்டம்,
உருமாண்டம்பாளையம்,
வெள்ளக்கிணர், கோயம்புத்தூர் -29.